# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2049 • நவம்பர் 24, 2018

Weekly E-paper • November 24, 2018





# கருஞ்சட்டைப் பதிப்பகம் வெளியீட்டு விழா

உள்ளே...




## உயிரையாவது காப்பாற்றுங்கள்!

– மா.உதயகுமார்



## திடீர் அய்யப்ப பக்தி!

– தலையங்கம்



## சாதி வீழும்! மானுடம் வெல்லும்!!

– வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2049 ●நவம்பர் 24, 2018 Weekly E-paper ●November 24, 2018

புதிய முயற்சி! அடுத்த நகர்வு!

# கருஞ்சட்டைப் பதிப்பகம்

## தொடக்க விழாவும் 4 நூல்கள் வெளியீடும்

## 17.11.2018 – சென்னை















# உடைமையைத்தான் காப்பாற்றவில்லை, உயிரையாவது காப்பாற்றுங்கள்!

மா.உதயகுமார்

இயற்கைப் பேரிடர் ஒன்று இன்னுமொருமுறை ஏற்பட்டுவிட்டது. இந்த முறை கூடுதலான பாதிப்புகளை ஏற்படுத்தி இருக்கிறது. இயற்கை இரக்கமற்றது என்பதை எடுத்துக்காட்ட இனி கஜாப் புயலின் பெயரே நினைவிற்கு வரும். புயலால் ஏற்பட்ட பாதிப்புகளைச் செய்திகளில் பார்க்கும் போதும், நேரில் கண்டவர்கள் கூறக் கேட்கும் போதும் தாங்கொணாத் துயரம் ஏற்படுகிறது.

உடைமையை இழந்து, உறவுகளை இழந்து, வாழ்க்கையை இழந்து, தண்ணீரும் உணவும் இல்லாமல் இருளில் மக்கள் தத்தளிக்கின்றனர். 88,102 ஹெக்டேர் விளைநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்து போயிருக்கின்றன.

தென்னை மர விவசாயி ஒருவர் தற்கொலை செய்துகொண்ட துயரச் செய்தி உள்ளத்தில் புயலாய் வீசுகிறது.

இவ்வளவு வேதனைகளுக்கு இடையில் தமிழ்நாட்டு மக்கள் தவிக்க, அவர்களை முதலமைச்சர் நேரில் வந்து சந்திக்காமல் இருப்பது மக்கள் நலனில் அவர்கள் எந்த அளவிற்கு அக்கறையோடு இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஓடி ஓடிக் கடமையாற்ற வேண்டிய நேரத்தில், களத்தில் இருந்து அமைச்சர்கள் தப்பி ஓடுகிற காட்சிகளையல்லவா நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு அகப்படாமல் ஓடிவிட நினைப்பவர்களுக்கு மக்களைச் சந்திக்கும் துணிவு எப்படி வரும்?

ஜெயலலிதாவைப் போலவே ஒரே ஒரு முறை ஹெலிகாப்டரில் உலாவந்து விட்டு டெல்லிக்குச் சென்றுவிட்டால் போதுமா? அரசு துடிப்புடன் செயல்பட்டிருக்க வேண்டாமா?

மக்கள் நிலைகுலைந்து போயிருக்கிறார்கள் அவர்களுக்கு அரணாக இருக்க வேண்டிய நேரத்தில், அரசு இப்படி முரணாய்ச் செயல்படுவது வஞ்சக எண்ணத்தைக் காட்டுகிறது. புயலால் இவ்வளவு சேதங்கள் ஏற்பட்டு இத்தனை நாட்கள் ஆன பின்னரும் மத்திய அரசு கொடூரமான மௌனத்தைக் காத்து வருவது பா.ஜ.கவின் கல் நெஞ்சத்தைக் காட்டுகிறது. அந்தக் கல் கரைவதற்கு இன்னும் எத்தனை புயல்கள் வீச வேண்டுமோ?



இயற்கைப் பேரிடரின்போது மனிதர்கள் தங்களுக்குள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஏற்றத்தாழ்வுகளை மறந்து ஒன்றாக இணைந்து ஒருவருக்கொருவர் ஆதரவாகவும் அரவணைப்பாகவும் இருந்து வருகின்றனர். இயன்ற உதவிகளைச் செய்து கீழே விழுந்தவனை மேலே தூக்கக் கரம் கொடுக்கிறார்கள். மனிதநேயத்தை வாழவைக்கிறார்கள்.

ஆனால் ஆட்சிப் பொறுப்பில் இருப்போர் பொறுப்பில்லாமல் செயல்பட்டு வருகின்றனர். தன்னுடைய உறவினரின் உயிரைக் காப்பாற்ற நினைத்த மாத்திரத்தில் இராணுவ ஹெலிகாப்டரை வரவழைக்க முடிகிறது. அவர்களால் கொடுக்கவும் முடிகிறது. ஆனால் இவ்வளவு பெரிய சேதம் ஏற்பட்ட பிறகும் கூட நிவாரணப் பணிகளுக்கு மத்திய அரசிடமிருந்து முதற்கட்ட நிதியைக் கூடப் பெற முடியவில்லை.

தங்களுக்குப் பாதகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக உள்ளாட்சித் தேர்தலையும் நடத்தாமல், தற்போது நிவாரணப் பணிகளையும் விரைந்து முடிக்க முடியாமல் மக்களை வாட்டி வதைக்கின்றனர்.

கஜாப் புயலைத் தேசியப் பேரிடராக அறிவித்துப் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை முடுக்கிவிட வேண்டும் என்று அரசை வற்புறுத்துகிறோம். இதுவரை தமிழர் உரிமைகள் யாவும் பறிபோயின. தற்போது உடைமைகளும் உயிர்களும் பறிபோயிருக்கின்றன. உரிமைகளைத்தான் காப்பாற்றவில்லை, உயிர்களையாவது காப்பாற்றுங்கள். ●

## கஜா புயல் நிவாரண நிதி



கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் திராவிட இயக்கத் தமிழர் பேரவை தன் உறுப்பினர்களிடம் நிதி திரட்டிக் கொண்டுள்ளது.

22.11.2018 வரையில் ரூ. 96,330 சேர்ந்துள்ளது. ஓர் இலக்கம் (ரூ.1,00,000) ரூபாய்க்குக் குறையாமல் நிதி சேர்த்து, 24.11.2018 அன்று பாதிக்கப்பட்ட அம்மக்களுக்குத் தேவையான பொருள்களைக் கொண்டு போய் சேர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது.

– பொதுச்செயலாளர்
(திராவிட இயக்கத் தமிழர் பேரவை)

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## இளைஞரணிக் கலந்துரையாடல்



*திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாநில இளைஞரணியினர் கலந்துரையாடல் கூட்டம் சென்னை, தலைமை அலுவலகத்தில் 17.11.2018 காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.*

*கூட்டத்தில் தோழர் எட்வின், சந்தானம், வேலூர் ஜெகநாதன், கார்த்தி, சிறிவித்யா, பிரவின் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டு கருத்துகளை எடுத்துக் கூறினார்கள்.*

*கூட்டத்திற்குத் துணைப் பொது செயலாளர் சிற்பி செல்வராஜ் தலைமை வகித்து, இளைஞரணியின் செயல்பாடுகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.*

## திராவிடத் தமிழர் அறக்கட்டளை விழா




*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## திடீர் அய்யப்ப பக்தி!

கன்னியாகுமரியில் முழு அடைப்பு போராட்டமாம். பாஜக தலைவர் தமிழசை அறிவித்துவிட்டார்.

ஏதோ கஜா புயல் நிவாரணப் பணியில் அரசு சரியாகச் செயல்படவில்லை என்ற மக்கள் பிரச்சனைக்காக இல்லை, இந்தப் போராட்டம்.

நம்மூர் மத்திய மந்திரி பொன். ராதாகிருஷ்ணன், அய்யப்பன் கோயிலுக்குப் போனபோது வழியில் சில இடையூறு காரணமாக இவரைக் கேரளக் காவல் துறை அரசுப் பேருந்தில் அனுப்பிவைத்தது.

இதற்காகத்தான் கன்னியாகுமரியில் முழு அடைப்புப் போராட்டம் என்கிறார் தமிழிசை.

தமிழ்நாட்டில் கஜா புயல் ஆடிய தாண்டவத்தால் நிலை குலைந்து போன தமிழக மக்களைப் பற்றிப் பாஜகவுக்குக் கவலை இல்லை.

இந்த மக்களுக்கு உதவி செய்ய வேண்டும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல், தமிழகத்தை விட்டுக் கேரளாவுக்குப் பொன். ராதாகிருஷ்ணன் போக வேண்டிய அவசியம் என்ன?

பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்காகக் கண்ணீர் விடாமல் அய்யப்பனுக்காகக் கண்ணீர் விட்டுக் கலங்கி இருக்கிறார் பொன்.ராதாகிருஷ்ணன் என்றால் அவர் நாட்டு மக்களுக்கு மந்திரியா அல்லது அய்யபனுக்கு மந்திரியா?

கேரள இடதுசாரி அரசு, மக்களுக்கான அரசாக நல்ல திட்டங்களை நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறது. அங்கே பாஜக செல்லாக்காசு.

அதனால் பாஜக வழக்கமாகச் செய்கின்ற ரத ஊர்வலம், ராமர் கோயில் போன்ற பாணியில் இப்பொழுது அய்யப்பனைக் காரணமாக வைத்து, அங்கு மத அடிப்படையிலான பிரச்னையை எழுப்பி, குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயல்கிறது அந்தக் கட்சி. அதன் துருப்புச் சீட்டுதான் பொன்.ராதாகிருஷ்ணனின் திடீர் அய்யப்ப பக்தியும், சபரிமலைப் பயணமும்.

தமிழக மக்களின் இன்றைய வாழ்வுரிமைப் போராட்டத்தைக் கொஞ்சமும் கருத்தில் கொள்ளாமல் பாஜக தலைவர் தமிழிசையும், மத்திய மந்திரி பொன்.ராதாகிருஷ்ணனும் சபரிமலை என்றும் போராட்டம் என்றும் பேசிக் கொண்டிருப்பதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது.

நாளை மக்களுக்கு இவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.



**SubaVeerapandian** @Suba_Vee · 2h

சபரிமலைக்குப் பெண்கள் வரக்கூடாது என்று தடுத்தனர். இப்போது அங்கு ஆண்கள் வருவதும் குறைந்து போய் விட்டது என்று வருத்தப்படுகின்றனர். மலை மலையாய் நாட்டில் சிக்கல்கள். அவற்றைத் திசைமாற்றக் கிடைத்துள்ளது ஒரு #சபரிமலை.

# சாதி வீழும்! மானுடம் வெல்லும்!

வெற்றிச்செல்வன்






அறிவார்ந்த இனச்சேர்க்கை மூலம் ஓரினத்தை மேம்படுத்துவது என்பதுதான், இனமேம்பாட்டியலின் அடிப்படைக் கொள்கை. ஆனால், சாதி அமைப்பில் இது போன்ற சிறந்த இனச்சேர்க்கை எப்படிச் சாத்தியமாகும்? பல்வேறு சாதிகளைச் சேர்ந்த மக்கள் தமக்குள் கலப்பு மணம் புரிவதைத் தடுக்கும் எதிர்மறை அமைப்பாகவே சாதி அமைப்பு இருக்கிறது.

அண்ணல் அம்பேத்கர் (சாதியை அழித்தொழிக்கும் வழி)

சங்கர்...
பிரணய்...
நந்தீஷ்...

பட்டியல் வகுப்பினரின் துயரப் பட்டியல் தொடர்ந்து கொண்டே போகிறது.

தேசிய குற்ற ஆவணக் கழகத்தின் தரவுகளின்படி, ஆணவக்கொலையின்கீழ் 2015ஆம் ஆண்டு 251 வழக்குகளும் 2016ஆம் ஆண்டு 77 வழக்குகளும் இந்தியாவெங்கும் பதியப்பட்டுள்ளன. எனினும் ஆணவக் கொலைகளைத் தடுக்கும் தனிச்சட்டம் இன்னும் கொண்டுவரப் படவில்லை. சட்டம் கைகட்டி நிற்கிறது. சாதிவெறி கோரத் தாண்டமாடுகின்றது.

கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்படுவது, குற்றம் இழைக்கத் துணிபவர்களைக் குற்றச் செயல்களிலிருந்து தடுக்கும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும் போது, சாதிவெறிக் கொடுமைகளைத் தடுத்து, கடுமையாகத் தண்டிக்க சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தமிழக எதிர்க்கட்சித் தலைவர் மு. க. ஸ்டாலின் அறிவித்திருப்பது நம்பிக்கையை அளிக்கிறது. எனினும் சட்டங்கள் மட்டுமே சமுகத்தில் மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது.

தாலாட்டிச் சீராட்டி வளர்த்த பிள்ளைகளையே வெட்டிச் சாய்க்கும் கொடூரம் மனதைப் பதற வைக்கிறது. அந்த அளவுக்குச் சாதிய வன்மம் தலைதூக்கி இருப்பது, சமூகத்தின் சாபக் கேடு. சாதி ஒழிய வேண்டுமெனில் சாதியைக் கட்டமைத்திருக்கும் சனாதன தர்மம் ஒழிய வேண்டும். இந்து மதம் ஒழியாமல் சாதி ஒழியாது.

"தீண்டாமை ஒழிப்புக்கோ, சாதி ஒழிப்புக்கோ நீங்கள் முதலில் உங்கள் மதத்தை ஒழிக்க வேண்டும். உங்கள் மதம் போகாமல் ஒருநாளும் உங்களது தீண்டாமைத் தன்மை ஒழியவே ஒழியாது" என்கிறார் தந்தை பெரியார் (குடிஅரசு,. 28.07.1935). இச்சமூக அவலத்தை முடிவுக்குக் கொண்டுவர சாதி ஒழிப்பையே முதன்மை நோக்காகக் கொண்டு பெரியாரிய இயக்கங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும். இம்மண்ணில் இருந்து சாதி ஒரு நாள் கட்டாயம் அகற்றப்படும். அது திராவிடச் சிந்தனை கொண்ட பெரியாரிய இயக்கங்களால் மட்டுமே இயலும்.

சாதி என்னும் மாயச்சுவர் மனிதர்களை விலங்குகளினும் கேடான நிலைக்குத் தள்ளும் அவலம் நீடிப்பதை அறிவார்ந்த சமூகம் இனியும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் மானுடம் நம் முகத்தில் காறி உமிழும். ●

**ஒரு காலத்தில் கௌரவப் படுகொலை என்றழைக்கப்பட்ட நிலைமை மாறி, இன்று ஆணவப்படுகொலை என்றழைக்கப்படுகிறது சாதியப் படுகொலைகள்.. எனினும் ஆங்கிலத்தில் 'Honour Killing' என்ற சொல்லாடலே தொடர்ந்து கையாளப்படுகிறது. இதைச் 'சாதி வெறுப்புப் படுகொலைகள்' [Caste-hatred Killings] என்று அழைக்கவேண்டும் என்று காஞ்சா ஐலையா போன்றவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர். (இந்தியன் எக்ஸ்பிரஸ், 21.09.2018).**

## கருஞ்சட்டைப் பதிப்பகம்

இப்போது விற்பனையில்...



விலை: ரூ.130



விலை: ரூ.80



விலை: ரூ.120



விலை: ரூ.110

இணையதளம் (ஆன்லைன்) மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்
www.tamilnool.club

தொடர்புக்கு
9543713558
044-42047162

கிடைக்குமிடம்: 130/122. என்.டி.ஆர் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை-24,

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.